**OS No.104/2017**

PW 2 - சங்கர்

நாள் 22.10.2025

**வா.சா. 2 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நிரூபண வாக்குமூலத்திற்கான விபரங்களை வாதி தான் கூறினார். அதனால் அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் எனக்குத் தெரியும். பிரதிவாதி யாரைத் தெரியும் என்றால் பாலமுருகன் மனைவி கயல்விழியைத் தெரியும். அவர்களைத் தவிர மற்ற பிரதிவாதிகளைத் தெரியாது என்றால் தெரியும்.

கருப்பையா மகன் முருகேசனைத் தெரியும் மற்றொரு பிரதிவாதியின் பெயர் தெரியாது. நிலம் வாங்கிக்கொடுக்கும் புரோக்கர் வேலை செய்கிறேன் என்றால் இல்லை நான் விவசாயி. நீங்கள் விவசாயம் செய்து வருவதாக உங்கள் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்ன பரிகாரம் கோரி வாதி வழக்கு போட்டுள்ளார் என்றால் அவர் சர்வே நம்பருக்கு உரிய பரிகாரம் கோட்டு போட்டுள்ளார். குறிப்பாக என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்து பிரதிவாதி கயல்விழியிடம் இருப்பதால் தான் வாதி கேட்கிறார் என்றால் இல்லை, அது வாதியிடம் தான் உள்ளது.

தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியமாக இருந்தது என்பது எனக்குத் தெரியாது. தற்போது தாவா சொத்தில் உள்ள கிணறு உபயோகம் இல்லாமல் உள்ளது. கிணற்றிற்கான மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. மேற்படி தாவா சொத்தில் உள்ள கிணறு மோட்டாருக்கான மின் இணைப்பு முத்துராசுதேவர் பெயரில் இருந்தது.

முத்துராசுதேவரிடம் இருந்து தாவா சொத்தை யார் கிரயம் வாங்கினார் என்பது எனக்குத் தெரியாது. தாவா சொத்திற்கு பட்டா முத்துராசுதேவர் பெயரில் இருந்ததா என்றால் அது எனக்குத் தெரியாது. கருப்பையா மகன் முருகேசன் பக்கத்து வயல்காரர் என்பதால் எனக்குத் தெரியும்.

வா.சா.ஆ 1 கிரய பத்திரத்தில் எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் வாங்கப்பட்டது தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ 1 ஆவணம் எழுதுவதற்கான விபரங்களை நான் தான் சொன்னேன். வா.சா.ஆ 1 ஆவணத்தில் எழுதிக்கொடுப்பவருக்கு அதில் கண்ட சொத்து எப்படி பாத்தியம் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது.

இந்த ஆவணத்தில் பாகப்பிரிவினையில் கிடைத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. பாகப்பிரிவினைப்பத்திரத்தை நான் பார்க்கவில்லை, அது யார் யாருக்கு பாக்பிரிவினை ஏற்பட்டது என்ற விபரம் தெரியாது. அந்த பாகபிரிவினை பத்திரத்தை வா.சா.ஆ 1 எழுதிக்கொடுப்பவர் எழுதி வாங்குபவர் அன்றைய தேதியில் கொடுத்துவிட்டாரா என்றால் அந்த விபரம் எனக்குத் தெரியாது.

வா.சா.ஆ 1 ஆவணத்தின் சொத்தின் சர்வே எண் தெரியும் நான்குமால் தெரியாது. இந்த ஆவணத்தில் மின் இணைப்பு எண் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பது எனக்குத் தெரியாது. வா.சா.ஆ 1 ஆவணத்தில் சொத்து விபரத்தில் எத்தனை குதிரைசக்தி திறன் கொண்ட மோட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பது எனக்குத் தெரியாது.

வா.சா.ஆ 1 ஆவணத்தின் முத்திரைத்தாள் எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது என்பதும் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ 1 ஆவணம் எழுதி முடித்த பின்பு யார் முதலில் கையொப்பம் செய்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ 1 ஆவணத்தில் எத்தனை கையொப்பம் நான் செய்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை.

வா.சா.ஆ 1 ஆவணத்தில் இன்னொரு சாட்சி யார் கையொப்பம் போட்டார் என்றால் முருகேசன் மகன் 2 வது சாட்சியாக கையொப்பம் இட்டார். நாங்கள் இரண்டு பேர் கையொப்பம் போட்டது தவிர வேறு யாரும் வா.சா.ஆ 1 ஆவணத்தில் கையொப்பம் செய்யவில்லை. வா.சா.ஆ 1 ஆவணம் எழுதப்பட்ட காலத்தில் மின் இணைப்பு முத்துராசுதேவர் பெயரில் இருந்தது.

கீழப்பசலை ராக்கை எனக்குத் தெரியும். அவர் இந்த வழக்கில் தரப்பினராக உள்ளாரா என்பது எனக்குத் தெரியாது. ராக்கு – முருகேசனுக்கு சித்திமுறை வேண்டும். தாவாச் சொத்து கயல்விழிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் அவருடைய பாத்தியத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

–Sd–

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

–Sd–
District Munsif,
Manamadurai.